செ.வெ.எண்: நாள்: 12.01.2022

**விருதுநகரில் 23 ஏக்கரில் ரூ.390.22 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு மருத்துவ கல்லூரியை காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.**

----

விருதுநகரில் 23 ஏக்கரில் ரூ.390.22 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு மருத்துவ கல்லூரியை காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் புது டெல்லியிலிருந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் மற்றும் மாண்புமிகு ஒன்றிய மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் முனைவர்.மன்சுக் மாண்டவியா ஆகியோர்கள் முன்னிலையில் இன்று(12.01.2022) திறந்து வைத்தார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் அருகே அரசு மருத்துவ கல்லூரி கட்டுவதற்கான கடந்த 2020 மார்ச் 1ஆம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டது.

மத்திய அரசு 60 சதவிகித பங்கு தொகையாக ரூ.195 கோடியும், மாநில அரசு 40 சதவிகித பங்கு தொகையாக ரூ.130 கோடியும் அளிக்கப்பட்டுள்ளது. அதோடு கூடுதல் செலவினங்களுக்காக மாநில அரசு சார்பில் ரூ.55 கோடி அளிக்கப்பட்டு மொத்தம் ரூ.390.22 கோடியில் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்களுக்கான கட்டிடம், நிர்வாக அலுவலக கட்டிடம், மாணவ, மாணவியர்களுக்கான தனித்தனியான விடுதி கட்டிடங்கள், கலை அரங்கம், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டிடங்கள், உடற்பயிற்சி கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், டெல்லியில் இருந்து காணொலி காட்சி மூலம் விருதுநகர் புதிய அரசு மருத்துவ கல்லூரியை திறந்து வைத்து உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு ஒன்றிய மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் டாக்டர்.பாரதி பிரவின் பவார், தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு தொழில், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு,இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் புதிய அரசு மருத்துவ கல்லூரியிலிருந்து, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ்குமார் அவர்கள், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.தங்கப்பாண்டியன் அவர்கள், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் அவர்கள், நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.காந்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.மனோகர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.மங்களராமசுப்ரமணியன், சிவகாசி சார் ஆட்சியர் திரு.பிரிதிவிராஜ்,இ.ஆ.ப., மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சங்குமணி மற்றும் மருத்துவத் துறை அதிகாரிகள், அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**